KEMENTERIAN PENDIDIKAN MALAYSIA

## KURIKULUM STANDARD SEKOLAH RENDAH

DOKUMEN STANDARD KURIKULUM DAN PENTAKSIRAN

# BAHASA TAMIL (SK)

# தமிழ்மொழி

## TAHUN ENAM

## ஆண்டு 6

# DOKUMEN STANDARD KURIKULUM DAN PENTAKSIRAN

***MODUL ELEKTIF***

## BAHASA TAMIL SEKOLAH KEBANGSAAN
## தேசியப்பள்ளிக்கான தமிழ்மொழி

## TAHUN 6
## ஆண்டு 6

KEMENTERIAN PENDIDIKAN MALAYSIA

## உள்ளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | முன்னுரை | 1 |
| 2. | குறியிலக்கு | 6 |
| 3. | நோக்கம் | 6 |
| 4. | உள்ளடக்க அமைப்பு | 8 |
| 5. | பள்ளி அளவிலான மதிப்பீடு | 9 |
| 6. | கலைத்திட்டக் குவிவு | 15 |
| 7. | உயர்நிலைச் சிந்தனைத்திறன் | 16 |
| 8. | தேசியப்பள்ளிக்கான உள்ளடக்கத் தரப் பட்டியல் (ஆண்டு 1 - 6) | 19 |
| 9. | உள்ளடக்கத் தரமும் கற்றல் தரமும் தர அடைவும் | |
| | கேட்டல்,பேச்சு | 23 |
| | வாசிப்பு | 26 |
| | எழுத்து | 28 |
| | செய்யுளும் மொழியணியும் | 31 |
| | இலக்கணம் | 32 |
| 10. | ஆறாம் ஆண்டுக்கான செய்யுளும் மொழியணியும் | 33 |
| 11. | ஆறாம் ஆண்டுக்கான இலக்கணம் | 34 |
| 12. | சொற்பட்டியல் | 35 |

## ருக்குன் நெகாரா

- இறைவன் மீது நம்பிக்கை வைத்தல்
- பேரரசருக்கும் நாட்டிற்கும் விசுவாசம் செலுத்துதல்
- அரசியலமைப்புச் சட்டத்தை உறுதியாகக் கடைப்பிடித்தல்
- சட்டமுறைப்படி ஆட்சி நடத்துதல்
- நன்னடத்தையையும் ஒழுக்கத்தையும் பேணுதல்

# தேசியக் கல்வித் தத்துவம்

மலேசியக் கல்வியானது இறைநம்பிக்கை, இறைவழி நிற்றல் எனும் அடிப்படையில் அறிவாற்றல், ஆன்மீகம், உள்ளம், உடல் ஆகியவை ஒன்றிணைந்து சமன்நிலையும் இயைபும் பெறத் தனிமனிதரின் ஆற்றலை முழுமையாக மேம்படுத்தும் ஒரு தொடர் முயற்சியாகும். இம்முயற்சியானது அறிவு, சால்பு, நன்னெறி, பொறுப்புணர்ச்சி, நல்வாழ்வு பெறும் ஆற்றல் ஆகியவற்றைப் பெற்றுக் குடும்பத்திற்கும் சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் ஒருமைப்பாட்டையும் செழிப்பையும் நல்கும் மலேசியரை உருவாக்கும் நோக்கத்தைக் கொண்டதாகும்.

## முன்னுரை

தொடக்கப்பள்ளிக்கான ஒருங்கிணைக்கப்பட்ட தர அடிப்படையிலான கலைத்திட்டம், ஏட்டுக் கல்விக்கு மட்டும் அதிக முக்கியத்துவம் கொடுக்காமல் மாணவர்களுக்குச் சுமையில்லாத முழுமையானதொரு கலைத்திட்டமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. மேலும், இக்கலைத்திட்டம் கல்வி மேம்பாட்டுப் பெருந்திட்டத்தின் (**2006 – 2010**) இரண்டாவது கொள்கைக்கேற்பவும் அமைந்துள்ளது.

கலைத்திட்ட மேம்பாட்டுப் பணியானது ஆக்கமிக்கதொரு தொடர்ச்சியான நடவடிக்கையாகும். தொடக்கப்பள்ளிக்கான கே.பி.எஸ்.ஆர். (**KBSR**) கலைத்திட்டம் முதன் முதலாக **1983**ஆம் ஆண்டு உருவாக்கம் கண்டது. இது **1993**ஆம் ஆண்டு ஒருங்கிணைக்கப்பட்ட கலைத்திட்டமாக மேம்படுத்தப்பட்டு, **2003**ஆம் ஆண்டில் மறுசீரமைப்புச் செய்யப்பட்டது. மேலும், இக்கலைத்திட்டம் **2011**ஆம் ஆண்டில் தற்காலத் தேவைக்கேற்பவும் எதிர்காலச் சவால்களை எதிர்கொள்ளவும் தர அடிப்படையிலான ஆவணமாக உருவாக்கம் கண்டுள்ளது.

### பாலர்பள்ளி, தொடக்கப்பள்ளி ஆகியவற்றுக்கான ஒருங்கிணைக்கப்பட்ட தர அடிப்படையிலான கலைத்திட்ட அமைப்பு

பாலர்பள்ளி, தொடக்கப்பள்ளி ஆகியவற்றுக்கான ஒருங்கிணைக்கப்பட்ட தர அடிப்படையிலான கலைத்திட்டம், கே.பி.எஸ்.ஆர். கலைத்திட்டக் கோட்பாடுகளின் அடிப்படையிலும் தேசியக் கல்வித்தத்துவத்திற்கேற்பவும் மாற்றியமைக்கப்பட்டுள்ளது.

### தேசியக் கல்வித்தத்துவம்

மலேசியக் கல்வியானது இறைநம்பிக்கை, இறைவழி நிற்றல் எனும் அடிப்படையில் அறிவாற்றல், ஆன்மீகம், உள்ளம், உடல் ஆகியவை ஒன்றிணைந்து, சமன்நிலையும் இயைபும் பெறத் தனிமனிதரின் ஆற்றலை முழுமையாக மேம்படுத்தும் ஒரு தொடர் முயற்சியாகும். இம்முயற்சியானது அறிவு, சால்பு, நன்னெறி, பொறுப்புணர்ச்சி, நல்வாழ்வு பெறும் ஆற்றல் ஆகியவற்றைப் பெற்றுக் குடும்பத்திற்கும் சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் ஒருமைப்பாட்டையும் செழிப்பையும் நல்கும் மலேசியரை உருவாக்கும் நோக்கத்தைக் கொண்டதாகும்.

## பாலர்பள்ளி, தொடக்கப்பள்ளி ஆகியவற்றுக்கான கல்விக் குறியிலக்கு

### பாலர்பள்ளிக்கான கல்விக் குறியிலக்கு

மாணவர்களைத் தொடக்கப்பள்ளிக்குத் தயார்ப்படுத்தும் வகையில் அவர்களின் ஆற்றலை அனைத்துக் கூறுகளில் வளப்படுத்துவதையும் அடிப்படைத் திறன்களைக் கைவரப் பெறுவதையும் ஆக்ககரமான நடத்தையை மேம்படுத்துவதையும் இலக்காகக் கொண்டுள்ளது.

### தொடக்கப்பள்ளிக்கான கல்விக் குறியிலக்கு

தொடக்கப்பள்ளிக்கான கல்விக் குறியிலக்கானது மாணவர்களின் முழுமையான ஆற்றலை மேம்படுத்துவதோடு சமன்நிலை, இணக்கம், உயர்வெண்ணம் ஆகியவற்றை உறுதிப்படுத்துகின்றது. மேலும், உடல், உள்ளம், ஆன்மீகம், அறிவாற்றல் ஆகிய கூறுகளை உள்ளடக்கிய மாந்தரை உருவாக்கத் துணைபுரிகிறது.

### கலைத்திட்ட அமைப்புக்கான அடிப்படைக் கூறுகள்

கலைத்திட்ட அமைப்பு அறிவு பெற்ற திறமையான மனித மேம்பாட்டை உருவாக்க வழிவகுக்கின்றது. இதில் அடங்கியுள்ள அடிப்படைக் கூறுகள் உடல், உள்ளம், ஆன்மீகம், அறிவாற்றல் கொண்ட சமன்நிலையிலான மனிதர்களை உருவாக்க ஒன்றோடொன்று இணைந்து செயல்படுகின்றன. கலைத்திட்ட அமைப்பிற்கான அடிப்படைக் கூறுகள் பின்வருமாறு:

1. தொடர்பு
2. ஆன்மீகம், நடத்தை, பண்பு
3. மனிதவியல்
4. சால்புடைமை
5. உடலும் முருகுணர்ச்சியும்
6. அறிவியல் தொழில்நுட்ப அறிவு




**விளக்கப் படம் 1: கலைத்திட்ட அமைப்புக்கான அடிப்படைக் கூறுகள்**

**தர அடிப்படையிலான பயிற்றியக் கலைத்திட்டம்**

பாலர்பள்ளி, தொடக்கப்பள்ளி ஆகியவற்றிற்கான கலைத்திட்டம் மாணவர்கள் அடைய வேண்டிய உள்ளடக்கத் தர, கற்றல் தர மற்றும் தர அடைவுக் கூற்றுகளைக் கொண்டுள்ளது.

**உள்ளடக்கத் தரம்**

வரையறுக்கப்பட்ட பள்ளி கால அளவில் மாணவர்கள் கல்வி தொடர்பான அறிவு, திறன், பண்புநெறி ஆகிய கூறுகளை உள்ளடக்கிய கூற்றினைப் பற்றித் தெரிந்து கொள்வதையும் அதன்படி இயங்குவதையும் உறுதிப்படுத்துவதே உள்ளடக்கத் தரமாகும்.

**கற்றல் தரம்**

ஒவ்வோர் உள்ளடக்கத் தரத்திற்கேற்பத் தரமான கற்றல், அடைவுநிலை ஆகியவற்றை உறுதி செய்வதே கற்றல் தரமாகும்.

**தர அடைவு**

தர அடைவு என்பது மாணவர்களின் கற்றல் அடைவுநிலையை விவரிக்கும் ஒன்றாகும். இது மாணவர்களின் கற்றல் வளர்ச்சி நிலையைக் காட்டுவதாகும்.

**தேசியப்பள்ளிக்கான தமிழ்மொழிக் கலைத்திட்டம்**

தேசியப்பள்ளியில் தமிழ்மொழி கூடுதல் மொழியாகவும் இரண்டாம் மொழியைக் கற்பிக்கும் அணுகுமுறையிலும் அமைந்துள்ளது. தேசியப்பள்ளியில் தமிழ்மொழியானது தொடர்பு கொள்ளும் திறனை வளர்ப்பதோடு அம்மொழியைக் கற்பதற்கான வலுவான அடிப்படையையும் அமைத்துக் கொடுக்கிறது. மேலும், இத்திட்டம் நன்னெறிப் பண்பு, அறிவு வளர்ச்சி, நாட்டுப் பற்று, ஒற்றுமையுணர்வு முதலியன சமூகத்தில் உருவாகுவதற்கு வழிகாண்கிறது.

தேசியக் கல்வித் தத்துவத்தின் அடிப்படையில் தமிழ்மொழிக் கலைத்திட்டம் மாணவரின் அறிவாற்றல், ஆன்மீகம், உடல், உள்ளம் ஆகிய கூறுகளில் சமச்சீர் வளர்ச்சி அடைவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. தமிழ்மொழி வாயிலாகப் பிறருடன் தொடர்பு கொள்ளவும் தம் கருத்தைச் செம்மொழியில் வெளிப்படுத்தவும் இக்கலைத்திட்டம் வழிகாண்கிறது.

தேசியப்பள்ளியில் பயிலும் மாணவர்கள் தமிழ்மொழியை அடிப்படை நிலையிலிருந்து கற்பர். ஆகவே, தேசியப்பள்ளியின் தமிழ்மொழிக் கலைத்திட்டத்தின் உள்ளடக்கமானது மாணவர்களின் அன்றாட வாழ்க்கைக்குத் தொடர்புடையதாகவும் இன்றைய சமுதாய வளர்ச்சிக்கு ஏற்புடையதாகவும் அமைந்துள்ளது. மேலும், இக்கலைத்திட்டம் மலேசிய மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட வாழ்க்கை முறையில் அடங்கியுள்ள குடியியல் கூறுகளையும் நாட்டுப்பற்றையும் முதன்மையாகக் கொண்டுள்ளது.

தேசியப்பள்ளிக்கான தமிழ்மொழிக் கலைத்திட்டத் தர மற்றும் மதிப்பீட்டு ஆவணத்தில் குறியிலக்கு, நோக்கங்கள், உள்ளடக்கத் தரம், கற்றல் தரம், தர அடைவு, இலக்கணம் ஆகிய கூறுகளோடு செய்யுளும் மொழியணியும் இடம்பெற்றுள்ளன. இத்தர மற்றும் மதிப்பீட்டு ஆவணம் அடிப்படை மொழித்திறன்களோடு நல்லொழுக்கம், தன்மதிப்பு, தன்னம்பிக்கை, தலைமைத்துவ ஆற்றல், நாட்டுப்பற்று, ஆன்மீகம் ஆகியவற்றை வளர்ப்பதிலும் துணை நிற்கின்றது. மேலும், தமிழ்மொழிக் கற்றல்கற்பித்தல் நடவடிக்கைகள் மிகுந்த பயனுள்ளதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் அமைய இது உருவாக்கப்பட்டிருக்கின்றது. எனவே, வரையறுக்கப்பட்டுள்ள உள்ளடக்கத் தரம், கற்றல் தரம் ஆகியவற்றை மாணவர்கள் அடைவதை ஆசிரியர்கள் உறுதி செய்ய வேண்டும்.

தேசியப்பள்ளியின் தமிழ்மொழிக் கலைத்திட்டம், மாணவர்கள் மொழித்திறன்களைக் கைவரப்பெற்றுச் சிறப்பாகப் பயன்படுத்தத் துணைபுரிகின்றது. ஆகவே, ஆசிரியர்கள் கற்றல்கற்பித்தல் நடவடிக்கைகளைத் திட்டமிடும்போதும் பயிற்றுத்துணைப் பொருள்களைத் தயார் செய்யும் போதும் தனியாள் வேற்றுமைகள், பல்வகைக் கற்றல் பாணிகள், பல்வகை நுண்ணறிவுகள் ஆகியவற்றையும் கருத்தில் கொள்ள வேண்டும். இது மாணவர்களின் அறிவாற்றலையும் ஆளுமையையும் மேம்பாடடையச் செய்யும்.

**குறியிலக்கு**

தேசியப்பள்ளியின் தமிழ்மொழிக் கலைத்திட்டம் மாணவர்கள் தமிழ்மொழி வாயிலாகத் தொடர்பு கொள்ளும் திறனைப் பெற்று அன்றாட வாழ்க்கையில் தமிழ்மொழியைப் பயன்படுத்தவும் சமூகத் தொடர்பினை ஏற்படுத்தவும் உணர்வுகளை வெளிப்படுத்தவும் வழிவகுக்கின்றது. மேலும், மாணவர்களுக்கிடையே நன்னெறி, நாட்டுப்பற்று, ஒற்றுமை ஆகியவற்றை வளர்ப்பதை இலக்காகக் கொண்டுள்ளது.

**நோக்கம்**

**தேசியப்பள்ளி தமிழ்மொழிக் கற்றல்கற்பித்தலின் இறுதியில் மாணவர்கள் அடைய வேண்டியவை:**

i. அன்றாட உரையாடலிலும் முறையான சூழல்களிலும் பேசப்படும் கருத்துகளைக் கவனமுடன் செவிமடுத்துப் புரிந்து கொள்ளுதல்.

ii. பல்வேறு சூழலுக்கேற்பச் சரியான உச்சரிப்புடன் சரளமாகப் பேசுதல்.

iii. கருத்துகளைத் திரட்டக் கலந்துரையாடுதல்; விவாதித்தல்.

iv. அறிவு, இலக்கியம் சார்ந்த பல்வேறு எழுத்துப் படிவங்களை வாசித்தல்; கருத்துகளைத் திரட்டி ஆக்கப்பூர்வமாகப் பரிசீலித்தல்.

v. பேச்சு, வாசிப்பு, எழுத்து ஆகியவற்றின் மூலம் நன்னெறிப் பண்பை வளர்த்தல்.

vi. பெற்ற அனுபவங்களையும் அறிவையும் பயன்படுத்தி எழுத்துப் படிவங்களைப் படைத்தல்.

vii. செய்யுள் மொழியணியின் பொருளை அறிந்து உய்த்துணரவும் பயன்படுத்தவும் தெரிந்து கொள்ளுதல்.

viii. பல்வேறு நடவடிக்கைகளில் சரியான உச்சரிப்பு, எழுத்து, கலைச்சொற்கள், இலக்கணம், ஆகியவற்றை முறையாகப் பயன்படுத்துதல்.

**தமிழ்மொழிக் கற்றல்கற்பித்தல்வழி ஆண்டு ஆறின் இறுதியில் மாணவர்கள் அடைய வேண்டியவை:**

i. செவிமடுத்தவற்றிலுள்ள கருத்துகளைக் கூறுதல்.

ii. சூழல் மற்றும் தலைப்பிற்கேற்பப் பொருத்தமான சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவற்றைப் பயன்படுத்திப் பேசுதல்.

iii. அனுபவத்தைக் கூறுதல்.

iv. பல்வேறு துறைசார்ந்த வாசிப்புப் பகுதிகளைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்புடன் வாசித்தல்.

v. பல்வேறு துறைசார்ந்த வாசிப்புப் பகுதிகளை வாசித்துப் புரிந்து கொள்ளுதல்.

vi. கருத்துணர் கேள்விகளுக்குப் பதில் எழுதுதல்.

vii. கோவையாக எழுதுதல்.

viii. செய்யுளையும் மொழியணியையும் அறிந்து சூழலுக்கேற்பச் சரியாகப் பயன்படுத்துதல்.

ix. அடிப்படை இலக்கண அறிவைப் பெற்றுச் சரியாகப் பயன்படுத்துதல்.

**உள்ளடக்க அமைப்பு**

தொடக்கப்பள்ளிக்கான தமிழ்மொழிக் கலைத்திட்டத் தர மற்றும் மதிப்பீட்டு ஆவணம் மாணவர்கள் அடைய வேண்டிய உள்ளடக்கத் தரத்தையும் கற்றல் தரத்தையும் வலியுறுத்துகின்றது. இத்தர மற்றும் மதிப்பீட்டு ஆவணம் கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து ஆகிய மொழித்திறன்களை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. மேலும், இலக்கணக் கூறுகளையும், செய்யுளையும் மொழியணியையும் ஒருங்கிணைப்பதுடன் கலைத்திட்டத்தின் உள்ளீடுகளையும் துணைப்பொருளாகக் கொள்கின்றது.

**கேட்டல் திறன்**

கேட்டல் திறனில் மாணவர்கள் பல்வேறு சூழல்களில் உன்னிப்பாகச் செவிமடுத்தும் ஒலி வேறுபாடு அறிந்து கொண்டும் செவிமடுத்தவற்றின் பொருளைப் புரிந்து கொண்டும் துலங்குவர்.

**பேச்சுத் திறன்**

பேச்சுத் திறனில் மாணவர்கள் நல்ல மொழியில் உரையாடிப் பிறருடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதோடு, சிந்தித்துத் தங்களின் கருத்துகள், எண்ணங்கள், தகவல்கள் ஆகியவற்றைச் சரியான உச்சரிப்புடனும் தெளிவுடனும் பிறருக்குக் கூறுவர்.

**வாசிப்புத் திறன்**

வாசிப்புத் திறனில் மாணவர்கள் சரளமாகவும் சரியான உச்சரிப்புடனும் உரக்க வாசிப்பர். மேலும், பல்வேறு உத்திகளைக் கையாண்டு ஆய்வுச் சிந்தனையுடன் வாசித்துக் கருத்துணர்வர்.

**எழுத்துத் திறன்**

எழுத்துத் திறனில் மாணவர்கள் எழுத்துப் பிழையின்றி, இலக்கண அமைதியுடன் நல்ல கையெழுத்தில் எழுதுவர். மேலும், சிந்தனைத்திறன்களைப் பயன்படுத்தித் தங்களுடைய எண்ணங்களையும் கருத்துகளையும் கற்பனை வளத்துடன் படைப்பர்.

**செய்யுளும் மொழியணியும்**

செய்யுள், மொழியணி ஆகியவற்றின்வழி மாணவர்கள் வரையறுக்கப்பட்ட இலக்கியப் பகுதிகளை அறிந்து உய்த்துணர்வதோடு வளமான மொழியாற்றலுடன் படைப்புகளை உருவாக்குவர்.

**இலக்கணம்**

தமிழ்மொழியைப் பிழையறப் பேசவும் வாசிக்கவும் எழுதவும் இலக்கண அறிவைப் பெற்று அதனைச் சரியான முறையில் பயன்படுத்துவர்.

**மொழிமுறைமை**

மொழிமுறைமை மொழி செயற்படும் விதத்தினை அடிப்படையாகக் கொண்டுள்ளது. ஆசிரியர்களுக்கு வழிகாட்டியாக மொழிமுறைமையில் இலக்கணக் கூறுகள், செய்யுள், பழமொழி, இணைமொழி, மரபுத்தொடர், உவமைத்தொடர், இரட்டைக்கிளவி போன்றவை வரையறுக்கப்பட்டுள்ளன.

**சொற்களஞ்சியம்**

அருஞ்சொற்களும் கலைச்சொற்களும் இந்தச் சொற்களஞ்சியத்தில் அடங்கும். நாட்டின் மேம்பாட்டிற்கேற்பவும் கல்வி, மொழி வளர்ச்சிக்கேற்பவும் தொடக்கப்பள்ளியில் சொற்களஞ்சியம் பெருக்கப்பட வேண்டும்.

**பாடவேளைக்கான பரிந்துரை**

தர அடிப்படையிலான இப்புதிய கலைத்திட்டத்தில் அடிப்படை மொழித்திறன்கள் தனித்துக் கற்பிக்க வலியுறுத்தப்படுகின்றது. இது சிறப்பாக அமைய ஒரு வாரத்தில் உள்ள 3 பாட வேளைகளில் கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து ஆகிய அடிப்படை மொழித்திறன்கள் ஒவ்வொன்றிற்கும் ஒரு பாடவேளை பயன்படுத்தப்பட வேண்டும். 2 அல்லது 3 வாரங்களுக்கு ஒருமுறை அடிப்படை மொழித்திறன்களில் ஏதாவது ஒன்றனைத் தவிர்த்து, செய்யுள் மொழியணியோ இலக்கணமோ கற்பிக்கப் பரிந்துரை செய்யப்படுகின்றது.

**பள்ளி அளவிலான மதிப்பீடு**

கற்றல்கற்பித்தலில் பள்ளி அளவிலான மதிப்பீடு முக்கியக் கூறாகக் கருதப்படுகிறது. மதிப்பீட்டின்வழி மாணவர்களின் உண்மையான அடைவுநிலை பற்றிய தகவலை ஆசிரியர் பெற்று, கற்றல்கற்பித்தலை மேம்படுத்திக் கொள்ள முடியும். பள்ளி அளவிலான மதிப்பீட்டில் திட்டமிடுதல், வினா மற்றும் மதிப்பீட்டுக் கருவி உருவாக்குதல், அவற்றை நிர்வகித்தல், புள்ளி வழங்குதல், முடிவுகளைப் பதிவு செய்தல், அறிக்கை தயாரித்தல் ஆகிய அனைத்து முக்கியப் பணிகளும் ஆசிரியராலும் பள்ளி நிர்வாகத்தாலும் மட்டுமே செய்யப்பட வேண்டும்.

பள்ளி அளவிலான மதிப்பீடு சமன்நிலை மாந்த உருவாக்கத்தில் ஆசிரியர் மற்றும் பள்ளி நிர்வாகத்தின் பங்களிப்பை நிர்ணயம் செய்வதில் முக்கியப் பங்காற்றுகிறது. எனவே, இப்பள்ளி அளவிலான மதிப்பீட்டில் ஆசிரியரும் பள்ளி நிர்வாகமும் முழுமையான ஈடுபாட்டையும் தெளிவான இலக்கையும் கொண்டு மாணவர்களின் ஆற்றலை மேம்படுத்துவதில் தொடர்முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

**பள்ளி அளவிலான மதிப்பீட்டின் தன்மைகள்:**

- முழுமையானது - அறிவு, திறன், பண்பு ஆகியவற்றின் அடைவுநிலையை முழுமையாகத் தரவல்லது.
- தொடர்ச்சியானது - கற்றல்கற்பித்தலுடன் இணைந்து செல்லக்கூடிய ஒரு தொடர்நடவடிக்கையாகும்.
- நெகிழ்வுத் தன்மையானது - மாணவர்களின் ஆர்வத்திற்கும் தயார்நிலைக்கும் ஏற்பப் பல்வகை அணுகுமுறையிலானது.
- தர அடைவைப் பிரதிபலிப்பது - கற்றல் தரத்திற்கேற்ப உருவாக்கப்பட்ட. தர அடைவின் பிரதிபலிப்பாகும்.

**பள்ளி அளவிலான மதிப்பீடு கீழ்க்கண்டவாறு அமையலாம்**

- கற்றல்கற்பித்தலுடன் இணைந்து செய்யக்கூடியது - முறைசாரா(*Formatif)* மதிப்பீடு
- ஆண்டு மத்தியிலோ இறுதியிலோ நடத்தப்படுவது - முறைசார்ந்த(*Sumatif*) மதிப்பீடு

**அடைவுநிலைக்கான விளக்கம்**

மாணவர்கள் தாங்கள் கற்ற கற்றல் தரத்தை எந்த நிலையில் கைவரப்பெற்றுள்ளனர் என்பதனைக் காட்டுவது அடைவுநிலையாகும். இந்த அடைவுநிலையைப் பயன்படுத்தி மாணவர்களின் குறைநிறைகளை அறிந்து அவற்றிற்கேற்பக் கற்றல்கற்பித்தல் நடவடிக்கைகளை மேம்படுத்தி மாணவர்களின் அடைவுநிலையை மேலும் உயர்த்துதல் ஆசிரியர்களின் கடமையாகும்.

அடைவுநிலை கீழ்க்கண்ட வகையில் விவரிக்கப்பட்டுள்ளது:

| அடைவுநிலை | விளக்கம் |
|---|---|
| 1 | மிகக் குறைவு |
| 2 | குறைவு |
| 3 | திருப்தி |
| 4 | நன்று |
| 5 | சிறப்பு |
| 6 | மிகச் சிறப்பு |

**கேட்டல்,பேச்சுக்கான ஒட்டுமொத்த அடைவுநிலை விவரிப்பு**

| அடைவுநிலை | அடைவுநிலை விவரிப்பு |
|---|---|
| 1 | மிகக் குறைந்த அளவிலும் அதிகத் தடுமாற்றத்துடனும் மட்டுமே செவிமடுத்தவற்றைக் கூறவும் அதற்கேற்பத் துலங்கவும் பொருத்தமான சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவற்றைப் பயன்படுத்திப் பேசவும் தகவல்களைக் கூறவும் இயலும். |
| 2 | குறைந்த அளவிலும் சிறிது தடுமாற்றத்துடனும் மட்டுமே செவிமடுத்தவற்றைக் கூறவும் அதற்கேற்பத் துலங்கவும் பொருத்தமான சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவற்றைப் பயன்படுத்திப் பேசவும் தகவல்களைக் கூறவும் இயலும். |
| 3 | ஓரளவு, செவிமடுத்தவற்றைக் கூறவும் அதற்கேற்பத் துலங்கவும் பொருத்தமான சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவற்றைப் பயன்படுத்திப் பேசவும் தகவல்களைக் கூறவும் இயலும். |
| 4 | செவிமடுத்தவற்றைச் சரியாகக் கூறவும் அதற்கேற்பத் துலங்கவும் பொருத்தமான சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவற்றைப் பயன்படுத்திச் சரளமாகப் பேசவும் தகவல்களைத் தெளிவாகக் கூறவும் இயலும். |
| 5 | செவிமடுத்தவற்றைச் சரியாகக் கூறவும் அதற்கேற்பத் துலங்கவும் பொருத்தமான சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவற்றைப் பயன்படுத்தி நல்ல மொழிநடையில் இலக்கணப்பிழையின்றிச் சரளமாகப் பேசவும் தகவல்களை நல்ல மொழிநடையில் விளக்கத்துடன் தெளிவாகக் கூறவும் இயலும். |
| 6 | செவிமடுத்தவற்றைச் சரியாகக் கூறவும் அதற்கேற்பத் துலங்கவும் பொருத்தமான சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவற்றைப் பயன்படுத்தி நல்ல மொழிநடையில் இலக்கணப்பிழையின்றிப் பொருத்தமான மொழியணிகளைப் பயன்படுத்தித் தயக்கமில்லாமல் சரளமாகப் பேசவும் தகவல்களைத் தயக்கமில்லாமல் நல்ல மொழிநடையில் விளக்கத்துடன் தெளிவாகத் கூறவும் இயலும். |

**வாசிப்புக்கான ஒட்டுமொத்த அடைவுநிலை விவரிப்பு**

| அடைவுநிலை | அடைவுநிலை விவரிப்பு |
|---|---|
| 1 | மிகக் குறைந்த அளவிலும் அதிகத் தடுமாற்றத்துடனும் மட்டுமே சொல், சொற்றொடர், வாக்கியம், வாசிப்புப் பகுதி ஆகியவற்றை வாசிக்கவும் கருத்துணர் கேள்விகளுக்குப் பதிலளிக்கவும் இயலும். |
| 2 | குறைந்த அளவிலும் சிறிது தடுமாற்றத்துடனும் மட்டுமே சொல், சொற்றொடர், வாக்கியம், வாசிப்புப் பகுதி ஆகியவற்றை வாசிக்கவும் கருத்துணர் கேள்விகளுக்குப் பதிலளிக்கவும் இயலும். |
| 3 | ஓரளவு, சொல், சொற்றொடர், வாக்கியம், வாசிப்புப் பகுதி ஆகியவற்றை வாசிக்கவும் கருத்துணர் கேள்விகளுக்குப் பதிலளிக்கவும் இயலும். |
| 4 | சொல், சொற்றொடர், வாக்கியம், வாசிப்புப் பகுதி ஆகியவற்றைச் சரியான உச்சரிப்புடனும் ஏற்ற தொனியுடனும் வாசிக்கவும் கருத்துணர் கேள்விகளுக்குத் தெளிவாகப் பதிலளிக்கவும் இயலும். |
| 5 | சொல், சொற்றொடர், வாக்கியம், வாசிப்புப் பகுதி ஆகியவற்றைச் சரியான உச்சரிப்புடனும் ஏற்ற தொனியுடனும் சரளமாக வாசிக்கவும் கருத்துணர் கேள்விகளுக்குத் தெளிவாக நல்ல மொழிநடையில் பதிலளிக்கவும் இயலும். |
| 6 | சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவற்றைச் சரியான உச்சரிப்புடனும் ஏற்ற தொனியுடனும் பொருளுணர்ந்து சரளமாக வாசிக்கவும் கருத்துணர் கேள்விகளுக்குத் தெளிவாக நல்ல மொழிநடையில் இலக்கணப்பிழையின்றிப் பதிலளிக்கவும் இயலும். |

**எழுத்துக்கான ஒட்டுமொத்த அடைவுநிலை விவரிப்பு**

| அடைவுநிலை | அடைவுநிலை விவரிப்பு |
|---|---|
| 1 | மிகக் குறைந்த அளவிலும் அதிக எழுத்துப்பிழையுடனும் மட்டுமே கருத்துகளைக் கோவையாக எழுத இயலும். |
| 2 | குறைந்த அளவிலும் சிறிது எழுத்துப்பிழையுடனும் மட்டுமே கருத்துகளைக் கோவையாக எழுத இயலும். |
| 3 | ஓரளவு, கருத்துகளைக் கோவையாக எழுத இயலும். |
| 4 | ஏரணமான கருத்துகளை இலக்கணப்பிழையின்றிக் கோவையாக எழுத இயலும். |
| 5 | ஏரணமான கருத்துகளை நல்ல மொழிநடையில் இலக்கணப்பிழையின்றிக் கோவையாக எழுத இயலும். |
| 6 | ஏரணமான கருத்துகளைப் பொருத்தமான மொழியணியைப் பயன்படுத்தி நல்ல மொழிநடையில் இலக்கணப்பிழையின்றிக் கோவையாக எழுத இயலும். |

**தமிழ்மொழிக்கான ஒட்டுமொத்த அடைவுநிலை விவரிப்பு**

| அடைவுநிலை | அடைவுநிலை விவரிப்பு |
|---|---|
| 1 | மாணவர்க்கு **மிகக் குறைந்த** மொழியறிவும் மொழியாற்றலும் உள்ளது. மிகக் குறைந்த அளவில் மட்டுமே செவிமடுத்தவற்றைப் புரிந்து கொள்ளவும் சரியான வேகம், தொனி, உச்சரிப்புடன் வாசிக்கவும் கருத்துணரவும் இயலும். மிகக் குறைந்த அளவில் மட்டுமே எண்ணங்களையும் கருத்துகளையும் வாய்மொழியாகவும் எழுத்து மூலமாகவும் வெளிப்படுத்த இயலும். |
| 2 | மாணவர்க்குக் **குறைந்த** மொழியறிவும் மொழியாற்றலும் உள்ளது. குறைந்த அளவில் மட்டுமே செவிமடுத்தவற்றைப் புரிந்து கொள்ளவும் சரியான வேகம், தொனி, உச்சரிப்புடன் வாசிக்கவும் கருத்துணரவும் இயலும். குறைந்த அளவில் மட்டுமே எண்ணங்களையும் கருத்துகளையும் வாய்மொழியாகவும் எழுத்து மூலமாகவும் வெளிப்படுத்த இயலும். |
| 3 | மாணவர்க்கு **ஓரளவு** மொழியறிவும் மொழியாற்றலும் உள்ளது. ஓரளவு, செவிமடுத்தவற்றைப் புரிந்து கொள்ளவும் சரியான வேகம், தொனி, உச்சரிப்புடன் வாசிக்கவும் கருத்துணரவும் இயலும். ஓரளவு எண்ணங்களையும் கருத்துகளையும் வாய்மொழியாகவும் எழுத்து மூலமாகவும் வெளிப்படுத்த இயலும். |
| 4 | மாணவர்க்கு **நல்ல** மொழியறிவும் மொழியாற்றலும் உள்ளது. செவிமடுத்தவற்றைப் புரிந்து கொள்ளவும் சரியான வேகம், தொனி, உச்சரிப்புடன் வாசிக்கவும் கருத்துணரவும் இயலும். எண்ணங்களையும் கருத்துகளையும் இலக்கணப்பிழையின்றி வாய்மொழியாகவும் எழுத்து மூலமாகவும் நன்றாக வெளிப்படுத்த இயலும். |
| 5 | மாணவர்க்குச் **சிறந்த** மொழியறிவும் மொழியாற்றலும் உள்ளது. செவிமடுத்தவற்றைப் புரிந்து கொள்ளவும் சரியான வேகம், தொனி, உச்சரிப்புடன் வாசிக்கவும் கருத்துணரவும் இயலும். எண்ணங்களையும் ஏரணமான கருத்துகளையும் இலக்கணப்பிழையின்றி நல்ல மொழிநடையில் வாய்மொழியாகவும் எழுத்து மூலமாகவும் சிறப்பாக வெளிப்படுத்த இயலும். |
| 6 | மாணவர்க்கு **மிகச் சிறந்த** மொழியறிவும் மொழியாற்றலும் உள்ளது. செவிமடுத்தவற்றைப் புரிந்து கொள்ளவும் சரியான வேகம், தொனி, உச்சரிப்புடன் வாசிக்கவும் கருத்துணரவும் இயலும். எண்ணங்களையும் ஏரணமான கருத்துகளையும் இலக்கணப்பிழையின்றி நல்ல மொழிநடையில் மொழியணிகளைப் பயன்படுத்திக் கவரும் வகையில் வாய்மொழியாகவும் எழுத்து மூலமாகவும் மிகச் சிறப்பாக வெளிப்படுத்த இயலும். |

**கலைத்திட்டக் குவிவு**

இக்கலைத்திட்ட உள்ளடக்கம் தமிழ்மொழியின் சிறப்பிற்கேற்பக் கற்றல்கற்பித்தலைச் செம்மைப்படுத்தும் நோக்கில் அமைக்கப்பட்டுள்ளது. பல்வேறு அறிவுத்துறையைச் சார்ந்த ஏதுகளை உள்ளடக்கமாக எடுத்தாள்வதற்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது.

**பொதுவறிவு**

குறிப்பிட்ட திறன்களை மேம்படுத்துவ தற்காக எடுத்தாளப்படும் அறிவியல், புவியியல் போன்ற பிற பாடத் துறைகளின் உள்ளடக்கமே பொது அறிவுக்கூறாகும். மேலும், மாணவர்களின் அறிவாற்றலை வளர்க்க நடப்புச் செய்திகளைக் கற்றல் கற்பித்தலில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

**நற்பண்பு**

ஒழுக்கமுடைய நல்ல மாணவரை உருவாக்கும் நோக்கத்தில் தமிழ்மொழிக் கல்வியில் நற்பண்புகளை விளக்கும் கூறுகள் இணைக்கப்பட்டுள்ளன. நற்பண்புகளை அன்றாட வாழ்க்கையில் ஏற்றுக் கடைப்பிடிப்பதன்வழி நல்ல இளைய தலைமுறையினரை உருவாக்க முடியும்.

**குடிமை**

நாட்டுப்பற்றையும் குடிமையுணர்வையும் கற்றல்கற்பித்தலில் வலி யுறுத்தித் தாய் நாட்டின் மீது அன்பும் பற்றும் வளரத் துணைபுரிய வேண்டும். இதன்வழி நாட்டுப்பற்றும் கடமையுணர்வும் கொண்ட நற்குடிமக்களை உருவாக்க முடியும்.

**சமுதாய பண்பாட்டு நெறிமுறைகள்**

மொழிப்பயன்பாட்டில் அடங்கியுள்ள மொழிப்பண்பு, மொழிநடை ஆகியவை சமுதாய பண்பாட்டு நெறிமுறைக் கூறுகளின் உள்ளடக்கங்களாகும். இவற்றில் மலேசியச் சமுதாயத்தின் நன்னெறிப் பண்புகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**உயர்நிலைச் சிந்தனைத்திறன்**

தேசியக் கலைத்திட்டமானது சமன்நிலை, உறுதி மனப்பான்மை, ஆய்ந்தறியும் திறன், கொள்கைப் பிடிப்பு, தகவல் அறிவு, நாட்டுப்பற்று, சிந்தனைத்திறன், தொடர்புத்திறன், இணைந்து செயலாற்றும் திறன் ஆகிய பண்புகளைக் கொண்ட மாணவனை உருவாக்கும் இலக்கைக் கொண்டுள்ளது. மலேசியக் கல்வி மேம்பாட்டுப் பெருந்திட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ள தலைமைத்துவத்திறன், இருமொழி ஆற்றல், ஆன்மீகமும் நெறியும், சமூக அடையாளம், அறிவாற்றல், சிந்தனைத்திறன் ஆகிய ஆறு இலக்குகளும் உலக அளவிலான சவால்களை எதிர்கொள்ளும் ஒவ்வொரு மாணவனும் பெற்றிருக்க வேண்டிய 21ஆம் நூற்றாண்டின் திறன்களாகும்.

1994ஆம் ஆண்டு ஆக்க, ஆய்வுச்சிந்தனையை அறிமுகப்படுத்தியதிலிருந்தே நமது கலைத்திட்டத்தில் சிந்தனைத்திறன் வலியுறுத்தப்பட்டு வந்துள்ளது. அதன் தொடர்ச்சியாக உயர்நிலைச் சிந்தனைத்திறன் 2011ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட தர அடிப்படையிலான கலைத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. அறிவு, திறன், பண்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு சீர்த்தூக்கிப் பார்த்து மீட்டுணர்தல்வழி சிக்கல் களைதல், முடிவெடுத்தல், புத்தாக்கச் சிந்தனையுடன் ஒன்றை உருவாக்குதல் ஆகியவையே உயர்நிலைச் சிந்தனைகளாகக் கருதப்படுகின்றன.

**உயர்நிலைச் சிந்தனைத்திறன் பின்வருவனவற்றை உள்ளடக்கியுள்ளது:**

| உயர்நிலைச் சிந்தனை | விளக்கம் |
|---|---|
| பயன்படுத்துதல் | அறிவு, திறன், பண்பு ஆகியவற்றைப் பொருத்தமான பல்வேறு சூழல்களில் பயன்படுத்தி ஒன்றைச் செய்தல். |
| பகுத்தாய்தல் | தகவலைச் சிறு சிறு பகுதிகளாகப் பிரித்து அத்தகவலை ஆழமாகப் புரிந்து கொள்வதோடு அதன் பகுதிகளுக்கிடையிலான தொடர்பையும் அறிதல். |
| மதிப்பிடுதல் | அறிவு, அனுபவம், திறன், பண்பு ஆகியவற்றைக் கொண்டு சீர்த்தூக்கிப் பார்த்தல்; முடிவெடுத்தல்; நியாயப்படுத்துதல். |
| உருவாக்குதல் | பொருள், ஏடல், வழிமுறை ஆகியவற்றை ஆக்கப் புத்தாக்கச் சிந்தனையோடு உருவாக்குதல். |

இந்தத் திறன் ஒவ்வொரு பாடக்கலைத்திட்டத்திலும் தெரிநிலையாக எழுதப்பட்டுள்ளது. சீர்த்தூக்கிப் பார்த்தல், கண்டறிதல்வழி கற்றல், சிக்கலுக்குத் தீர்வுகாணுதல் ஆகிய நடவடிக்கைகள்வழி உயர்நிலைச் சிந்தனையை வகுப்பறையில் கற்பிக்கலாம். மனவோட்டவரைவு, உயர்நிலைச் சிந்தனைக் கேள்வி போன்றவற்றை ஆசிரியர்களும் மாணவர்களும் சிந்தனைக்கருவிகளாகப் பயன்படுத்திச் சிந்தனைத்திறனை வளர்த்தல் வேண்டும். மாணவர்கள் தங்களுடைய கற்றலுக்குத் தாமே பொறுப்பேற்க வேண்டும் என்ற சிந்தனையையும் உணர்த்துதல் வேண்டும்.

**புதிய நூற்றாண்டில் மதிப்புயர்வு தரும் திறன்கள்**

மாணவரின் அன்றாட வாழ்க்கைச் சூழல்களுக்கும் உலக நிகழ்வுகளுக்கும் ஏற்ற வகையில் வகுப்பறை அனுபவங்க ள் அமைய இத்தர மற்றும் மதிப்பீட்டு ஆவணம் முக்கியத்துவம் வழங்குகின்றது . இக்கால கற்றல்கற்பித்தல் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டுத் தமிழ்மொழிக் கலைத்திட்டத் தர மற்றும் மதிப்பீட்டு ஆவணத்தில் சிந்தனைத்திறன், பல்வகை நுண்ணறிவு, வாழ்நாள் முழுவதும் கற்கும் திறன் , எதிர்காலவியல் ஆகிய திறன்கள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளன. இவை மதிப்புயர்வு தரும் திறன்களாகக் கருதப்படுகின்றன.

**சிந்தனைத்திறன்**

கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து ஆகிய மொழித்திறன்கள் நடவடிக்கைகளின் வாயிலாகவும் வினாக்க ளின் வாயிலாகவும் ஆக்கச் சிந்தனையையும் ஆய்வுச் சிந்தனையை யும் தூண்டும் நடவடிக்கைகளின் வாயிலாகவும் சிந்தனைத்திறன்கள் கற்பிக்கப்படுகின்றன. மாணவர்கள் எதிர்காலத்தில் அன்றாட வாழ்வுக்கும் தம் தொழிலில் ஏற்படும் சிக்கல்களைக் களையவும் அவற்றைப் பற்றிய முடிவுகளை எடுக்கவும் சிந்தனைத்திறன் இன்றியமையாததாகும்.

**பல்வகை நுண்ணறிவு**

மொழித்திறன், ஏரணம், இசை, இயக்கம், இடம், தன்னறி, சமூகம், இயற்கையியல் போன்றவை பல்வகை நுண்ணறிவுகளாகும். மாணவரிடம் காணப்படும் பல்வேறு நுண்ணறிவுகளை அடையாளம் கண்டு அவற்றிற்கேற்ப விளைபயன்மிக்க கற்றல்கற்பித்தல் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

**வாழ்நாள் முழுவதும் கற்கும் திறன்**

வாழ்நாள் முழுவதும் கற்கும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளத் தேவைப்படும் கற்றல் திறனைக் கைவரப்பெற்றிருப்பது அவசியமாகும். இத்திறனைக் கைவரப்பெற்றிருக்கும் மாணவர்கள் காலத்திற்கேற்ப அறிவை வளப்படுத்திக் கொள்வதோடு விரைவான மாற்றத்தை அடைந்துவரும் உலகியல் சவால்களை எதிர்கொள்ளும் ஆற்றலையும் பெற்றிருப்பர்.

**எதிர்காலவியல்**

எதிர்காலவியல் என்பது கடந்த கால , நிகழ்கால, எதிர்கால நடப்புகளையும் சிக்கல்களையும் உணரும் வகையில் மேற்கொள்ளப்படும் கற்றல் அணுகுமுறையாகும். இதன்வழி மாணவர்கள் நடந்த வற்றிலிருந்து நடக்கவிருப்பதை அனுமானித்து அதன் விளைவை ஊகித்து அதற்கேற்பத் தங்களைத் தயார்ப்படுத்திக் கொள்வர்.

**விரவி வரும் கூறுகள்**

விரவி வரும் கூறுகளாகத் தகவல் தொடர்புத் தொழில்நுட்பத் திறன், தொழில்முனைப்புத் திறன், ஆக்கமும் புத்தாக்கமும் ஆகியன இத்தர மற்றும் மதிப்பீட்டு ஆவணத்தில் இணைக்கப்பட்டுள்ளன.

**தகவல் தொடர்புத் தொழில்நுட்பத் திறன்**

தகவல் தொடர்புத் தொழில்நுட்ப யுகத்தில் மின்னஞ்சல் மூலம் தகவல் பரிமாற்றம் செய்து கொள்ளவும் அன்றாடப் பணிகளை நிறைவு செய்ய மென்பொருள்களைப் பயன்படுத்தவும் இணையத்தில் கிடைக்கப்பெறும் தகவல்களைத் திரட்டக் கணினியைப் பயன்படுத்தும் அறிவையும் மாணவர்கள் பெற்றிருப்பது அவசியமாகும்.

**தொழில்முனைப்புத் திறன்**

கற்றல்கற்பித்தலில் தொழில்முனைப்புத் திறன் இணைக்கப்படுவதன்வழி இத்திறன் மாணவர்களிடையே ஒரு வாழ்வியல் பண்பாடாக உருவெடுக்கத் தொடக்கப்பள்ளிக்கான தர மற்றும் மதிப்பீட்டு ஆவணம் வழிவகுக்கிறது. தொழில்முனைப்புத் திறனை அன்றாட வாழ்க்கையில் வழக்கப்படுத்திக் கொள்வதோடு மட்டுமல்லாமல் தொழில் முனைவருக்கு இருக்க வேண்டிய தொழில் முனைப்புச் சிந்தனை, வாணிப நிர்வாகத்திறன், தொழில்நுட்பப் பயன்பாடு, தொழில்முனைப்புக் கோட்பாடு, நன்னெறிப் பண்பு ஆகியவை இணைக்கப்பட்டுள்ளன.

**ஆக்கமும் புத்தாக்கமும்**

ஆக்கம் என்பது தனிமனிதர் ஒருவர் உருவாக்கும் ஆற்றல், தீர்வு காணும் திறன், கற்பனையாற்றல் ஆகியவற்றைப் பயன்படுத்திப் புதியதொன்றை உருவாக்குவதாகும். புத்தாக்கம் என்பது ஒரு குறிப்பிட்ட சூழலின் ஆக்ககரமான சிந்தனை வெளிப்பாட்டினையும் பயன்பாட்டினையும் குறிக்கின்றது. சால்பும் திறமும் பெற்ற மனித மூலதனத்தை உருவாக்குவதற்கு ஆக்கமும் புத்தாக்கமும் ஒன்றோடொன்று நெருங்கிய தொடர்பைக் கொண்டிருக்கின்றன. ஆக்க, புத்தாக்கச் சிந்தனையை மேலோங்கச் செய்வதன்வழி ஒருவர் தரமான படைப்புகளை உருவாக்கும் ஆற்றலைப் பெறுவார். இதுவே எதிர்காலத்தில் மலேசியர்களின் அன்றாட வாழ்வியல் முறையாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## தேசியப்பள்ளிக்கான தமிழ்மொழி உள்ளடக்கத் தரப் பட்டியல்
## ஆண்டு 1 – 6

| கேட்டல்,பேச்சு | |
|---|---|
| 1.1 | எழுத்துகளைச் சரியாக ஒலிப்பர். |
| 1.2 | சொற்களைச் சரியாக உச்சரிப்பர். |
| 1.3 | செவிமடுத்தவற்றைச் சரியாகக் கூறுவர்; அதற்கேற்பத் துலங்குவர். |
| 1.4 | கேள்விகளுக்குச் சரியான சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவற்றைக் கொண்டு பதில் கூறுவர். |
| 1.5 | பொருத்தமான சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவற்றைப் பயன்படுத்திப் பேசுவர். |
| 1.6 | தகவல்களைக் கூறுவர். |

| வாசிப்பு | |
|---|---|
| 2.1 | சரியான உச்சரிப்புடன் வாசிப்பர். |
| 2.2 | வாசிப்புப் பகுதிகளைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்புடன் வாசிப்பர். |
| 2.3 | அருஞ்சொற்களின் பொருளை அறிவர். |
| 2.4 | வாசித்துப் புரிந்து கொள்வர். |

| எழுத்து | |
|---|---|
| 3.1 | நல்ல கையெழுத்தில் சரியான வரிவடிவத்துடன் தூய்மையாக எழுதுவர். |
| 3.2 | சொல்வளம் பெருக்கிக் கொள்வர். |
| 3.3 | வாக்கியம் அமைப்பர். |
| 3.4 | கருத்துணர் கேள்விகளுக்குப் பதில் எழுதுவர். |
| 3.5 | சொல்வதை எழுதுவர். |
| 3.6 | கருத்துகளைக் கோவையாக எழுதுவர். |

| செய்யுளும் மொழியணியும் | |
|---|---|
| 4.1 | ஆத்திசூடியின் பொருளை அறிந்து கூறுவர்; எழுதுவர். |
| 4.2 | கொன்றை வேந்தனின் பொருளை அறிந்து கூறுவர்; எழுதுவர். |
| 4.3 | உலகநீதியின் பொருளை அறிந்து கூறுவர்; எழுதுவர். |
| 4.4 | திருக்குறளின் பொருளை அறிந்து கூறுவர்; எழுதுவர். |
| 4.5 | இணைமொழிகளின் பொருளை அறிந்து கூறுவர்; சூழலுக்கேற்பச் சரியாகப் பயன்படுத்துவர். |
| 4.6 | உவமைத்தொடர்களின் பொருளை அறிந்து கூறுவர்; சூழலுக்கேற்பச் சரியாகப் பயன்படுத்துவர். |
| 4.7 | இரட்டைக்கிளவிகளைச் சூழலுக்கேற்பச் சரியாகப் பயன்படுத்துவர். |
| 4.8 | மரபுத்தொடர்களின் பொருளை அறிந்து கூறுவர்; சூழலுக்கேற்பச் சரியாகப் பயன்படுத்துவர். |
| 4.9 | பழமொழிகளின் பொருளை அறிந்து கூறுவர்; எழுதுவர். |

| இலக்கணம் | |
|---|---|
| 5.1 | எழுத்திலக்கணத்தை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். |
| 5.2 | கிரந்த எழுத்துகளை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். |
| 5.3 | சொல்லிலக்கணத்தை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். |
| 5.4 | வலிமிகும் இடங்களை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். |
| 5.5 | வலிமிகா இடங்களை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். |

# உள்ளடக்கத் தரம்
# கற்றல் தரம்
# அடைவுநிலை

**1.0 கேட்டல்,பேச்சு**
**தொகுதி 1**

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் | தர அடைவு | |
|---|---|---|---|
| | | அடைவுநிலை | அடைவுநிலை விவரிப்பு |
| 1.3<br>செவிமடுத்தவற்றைச் சரியாகக் கூறுவர்; அதற்கேற்பத் துலங்குவர். | 1.3.16<br>செவிமடுத்த உரையாடலில் உள்ள கருத்துகளைச் சரியாகக் கூறுவர்.<br><br>1.3.17<br>செவிமடுத்த உரையில் உள்ள கருத்துகளைச் சரியாகக் கூறுவர்.<br><br>1.3.18<br>செவிமடுத்தவற்றை நிரல்படக் கூறுவர். | 1<br>**மிகக் குறைவு** | மிகக் குறைந்த அளவிலும் அதிகத் தடுமாற்றத்துடனும் மட்டுமே செவிமடுத்த உரையாடல், உரை ஆகியவற்றிலுள்ள கருத்துகளைச் சரியாகக் கூறவும் செவிமடுத்தவற்றை நிரல்படக் கூறவும் இயலும். |
| | | 2<br>**குறைவு** | குறைந்த அளவிலும் சிறிது தடுமாற்றத்துடனும் மட்டுமே செவிமடுத்த உரையாடல், உரை ஆகியவற்றிலுள்ள கருத்துகளைச் சரியாகக் கூறவும் செவிமடுத்தவற்றை நிரல்படக் கூறவும் இயலும். |
| | | 3<br>**திருப்தி** | ஓரளவு, செவிமடுத்த உரையாடல், உரை ஆகியவற்றிலுள்ள கருத்துகளைச் சரியாகக் கூறவும் செவிமடுத்தவற்றை நிரல்படக் கூறவும் இயலும். |
| | | 4<br>**நன்று** | செவிமடுத்த உரையாடல், உரை ஆகியவற்றிலுள்ள கருத்துகளைச் சரியாகவும் செவிமடுத்தவற்றை நிரல்படவும் சரளத்துடன் கூற இயலும். |
| | | 5<br>**சிறப்பு** | செவிமடுத்த உரையாடல், உரை ஆகியவற்றிலுள்ள கருத்துகளைச் சரியாகவும் செவிமடுத்தவற்றை நிரல்படவும் சரளத்துடன் தயக்கமில்லாமல் கூற இயலும். |
| | | 6<br>**மிகச் சிறப்பு** | செவிமடுத்த உரையாடல், உரை ஆகியவற்றிலுள்ள கருத்துகளைச் சரியாகவும் செவிமடுத்தவற்றை நிரல்படவும் சரளத்துடன் தயக்கமில்லாமல் கவரும் வகையில் கூற இயலும். |

**1.0 கேட்டல்,பேச்சு**

**தொகுதி 2**

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் | தர அடைவு | |
|---|---|---|---|
| | | அடைவுநிலை | அடைவுநிலை விவரிப்பு |
| 1.4<br>கேள்விகளுக்குச் சரியான சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவற்றைக் கொண்டு பதில் கூறுவர். | 1.4.7<br>ஏன், எப்படி எனும் வினாச் சொற்களுக்கேற்பப் பதில் கூறுவர்.<br><br>1.4.8<br>கேள்விகளுக்கு விளக்கமாகவும் தெளிவாகவும் வாக்கியத்தில் பதில் கூறுவர். | 1<br>**மிகக் குறைவு** | மிகக் குறைந்த அளவில் மட்டுமே ஏன், எப்படி எனும் வினாச் சொற்களுக்கேற்பவும் கேள்விகளுக்கு விளக்கமாகவும் தெளிவாகவும் வாக்கியத்தில் பதில் கூற இயலும். |
| | | 2<br>**குறைவு** | குறைந்த அளவில் மட்டுமே ஏன், எப்படி எனும் வினாச் சொற்களுக்கேற்பவும் கேள்விகளுக்கு விளக்கமாகவும் தெளிவாகவும் வாக்கியத்தில் பதில் கூற இயலும். |
| | | 3<br>**திருப்தி** | ஓரளவு, ஏன், எப்படி எனும் வினாச் சொற்களுக்கேற்பவும் கேள்விகளுக்கு விளக்கமாகவும் தெளிவாகவும் வாக்கியத்தில் பதில் கூற இயலும். |
| | | 4<br>**நன்று** | ஏன், எப்படி எனும் வினாச் சொற்களுக்கேற்பவும் கேள்விகளுக்கு விளக்கமாகவும் தெளிவாகவும் வாக்கியத்தில் சரளமாகப் பதில் கூற இயலும். |
| | | 5<br>**சிறப்பு** | ஏன், எப்படி எனும் வினாச் சொற்களுக்கேற்பவும் கேள்விகளுக்கு விளக்கமாகவும் தெளிவாகவும் வாக்கியத்தில் நல்ல மொழிநடையில் சரளமாகப் பதில் கூற இயலும். |
| | | 6<br>**மிகச் சிறப்பு** | ஏன், எப்படி எனும் வினாச் சொற்களுக்கேற்பவும் கேள்விகளுக்கு விளக்கமாகவும் தெளிவாகவும் வாக்கியத்தில் நல்ல மொழிநடையில் சரளமாகவும் தயக்கமில்லாமலும் பதில் கூற இயலும். |

## 1.0 கேட்டல்,பேச்சு
## தொகுதி 3

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் | தர அடைவு | |
|---|---|---|---|
| | | அடைவுநிலை | அடைவுநிலை விவரிப்பு |
| 1.5<br>பொருத்தமான சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவற்றைப் பயன்படுத்திப் பேசுவர்.<br><br>1.6<br>தகவல்களைக் கூறுவர். | 1.5.11<br>சூழலுக்கேற்பப் பொருத்தமான சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவற்றைப் பயன்படுத்திப் பேசுவர்.<br><br>1.5.12<br>தலைப்பிற்கேற்பப் பொருத்தமான சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவற்றைப் பயன்படுத்திப் பேசுவர்.<br><br>1.6.4<br>பெற்ற அனுபவத்தைக் கூறுவர்.<br><br>1.6.5<br>குறிவரைவில் உள்ள தகவல்களைக் கூறுவர். | 1<br>**மிகக் குறைவு** | மிகக் குறைந்த அளவிலும் அதிகத் தடுமாற்றத்துடனும் மட்டுமே சூழல், தலைப்பு ஆகியவற்றிற்கேற்பப் பொருத்தமான சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவற்றைப் பயன்படுத்திப் பேசவும் பெற்ற அனுபவம், குறிவரைவிலுள்ள தகவல்கள் ஆகியவற்றைக் கூறவும் இயலும். |
| | | 2<br>**குறைவு** | குறைந்த அளவிலும் சிறிது தடுமாற்றத்துடனும் மட்டுமே சூழல், தலைப்பு ஆகியவற்றிற்கேற்பப் பொருத்தமான சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவற்றைப் பயன்படுத்திப் பேசவும் பெற்ற அனுபவம், குறிவரைவிலுள்ள தகவல்கள் ஆகியவற்றைக் கூறவும் இயலும். |
| | | 3<br>**திருப்தி** | சூழல், தலைப்பு ஆகியவற்றிற்கேற்பப் பொருத்தமான சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவற்றைப் பயன்படுத்திப் பேசவும் பெற்ற அனுபவம், குறிவரைவிலுள்ள தகவல்கள் ஆகியவற்றைக் கூறவும் ஓரளவு இயலும். |
| | | 4<br>**நன்று** | சூழல், தலைப்பு ஆகியவற்றிற்கேற்பப் பொருத்தமான சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவற்றைப் பயன்படுத்திச் சரளமாகப் பேசவும் பெற்ற அனுபவம், குறிவரைவிலுள்ள தகவல்கள் ஆகியவற்றை விளக்கமாகக் கூறவும் இயலும். |
| | | 5<br>**சிறப்பு** | சூழல், தலைப்பு ஆகியவற்றிற்கேற்பப் பொருத்தமான சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவற்றைப் பயன்படுத்தி நல்ல மொழிநடையில் சரளமாகப் பேசவும் பெற்ற அனுபவம், குறிவரைவிலுள்ள தகவல்கள் ஆகியவற்றை விளக்கத்துடன் தெளிவாகக் கூறவும் இயலும். |
| | | 6<br>**மிகச் சிறப்பு** | சூழல், தலைப்பு ஆகியவற்றிற்கேற்பப் பொருத்தமான சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவற்றைப் பயன்படுத்தி நல்ல மொழிநடையில் ஏற்ற மொழியணியைக் கொண்டு தயக்கமில்லாமல் சரளமாகப் பேசவும் பெற்ற அனுபவம், குறிவரைவிலுள்ள தகவல்கள் ஆகியவற்றை விளக்கத்துடன் தெளிவாக மொழியணியைப் பயன்படுத்திக் கவரும் வகையில் கூறவும் இயலும். |

## 2.0 வாசிப்பு

### தொகுதி 1

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் | தர அடைவு | |
|---|---|---|---|
| | | அடைவுநிலை | அடைவுநிலை விவரிப்பு |
| 2.2<br>வாசிப்புப் பகுதிகளைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்புடன் வாசிப்பர். | 2.2.10<br>விளையாட்டுத் தொடர்பான பனுவலைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்புடன் வாசிப்பர்.<br>2.2.11<br>கலை தொடர்பான பனுவலைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்புடன் வாசிப்பர்.<br>2.2.12<br>அறிவியல் தொடர்பான பனுவலைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்புடன் வாசிப்பர்.<br>2.2.13<br>பண்பாடு தொடர்பான பனுவலைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்புடன் வாசிப்பர்.<br>2.2.14<br>தகவல் தொடர்புத் தொழில்நுட்பம் தொடர்பான பனுவலைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்புடன் வாசிப்பர்.<br>2.2.15<br>சுற்றுச்சூழல் தொடர்பான பனுவலைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்புடன் வாசிப்பர்.<br>2.2.16<br>வரலாறு தொடர்பான பனுவலைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்புடன் வாசிப்பர். | 1<br>**மிகக் குறைவு** | விளையாட்டு, கலை, அறிவியல், பண்பாடு, தகவல் தொடர்புத் தொழில்நுட்பம், சுற்றுச்சூழல், வரலாறு ஆகியவை தொடர்பான பனுவல்களை மிகக் குறைந்த அளவில் மட்டுமே சரியான வேகம், தொனி, உச்சரிப்புடன் வாசிக்க இயலும். |
| | | 2<br>**குறைவு** | விளையாட்டு, கலை, அறிவியல், பண்பாடு, தகவல் தொடர்புத் தொழில்நுட்பம், சுற்றுச்சூழல், வரலாறு ஆகியவை தொடர்பான பனுவல்களைக் குறைந்த அளவில் மட்டுமே சரியான வேகம், தொனி, உச்சரிப்புடன் வாசிக்க இயலும். |
| | | 3<br>**திருப்தி** | விளையாட்டு, கலை, அறிவியல், பண்பாடு, தகவல் தொடர்புத் தொழில்நுட்பம், சுற்றுச்சூழல், வரலாறு ஆகியவை தொடர்பான பனுவல்களை ஓரளவு சரியான வேகம், தொனி, உச்சரிப்புடன் வாசிக்க இயலும். |
| | | 4<br>**நன்று** | விளையாட்டு, கலை, அறிவியல், பண்பாடு, தகவல் தொடர்புத் தொழில்நுட்பம், சுற்றுச்சூழல், வரலாறு ஆகியவை தொடர்பான பனுவல்களைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்புடன் சரளமாக வாசிக்க இயலும். |
| | | 5<br>**சிறப்பு** | விளையாட்டு, கலை, அறிவியல், பண்பாடு, தகவல் தொடர்புத் தொழில்நுட்பம், சுற்றுச்சூழல், வரலாறு ஆகியவை தொடர்பான பனுவல்களைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்புடன் சரளமாகவும் உணர்ச்சியுடனும் வாசிக்க இயலும். |
| | | 6<br>**மிகச் சிறப்பு** | விளையாட்டு, கலை, அறிவியல், பண்பாடு, தகவல் தொடர்புத் தொழில்நுட்பம், சுற்றுச்சூழல், வரலாறு ஆகியவை தொடர்பான பனுவல்களைச் சரியான வேகம், தொனி, உச்சரிப்புடன் சரளமாகவும் உணர்ச்சியுடனும் கவரும் வகையில் வாசிக்க இயலும். |

**2.0 வாசிப்பு**
**தொகுதி 2**

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் | தர அடைவு | |
|---|---|---|---|
| | | அடைவுநிலை | அடைவுநிலை விவரிப்பு |
| 2.3<br>அருஞ்சொற்களின் பொருளை அறிவர்.<br><br>2.4<br>வாசித்துப் புரிந்து கொள்வர். | 2.3.3<br>ஒரே பொருள் தரும் சொற்களை அறிவர்.<br><br>2.4.10<br>விளம்பரத்தை வாசித்துப் புரிந்து கொள்வர்.<br><br>2.4.11<br>உரையாடலை வாசித்துப் புரிந்து கொள்வர்.<br><br>2.4.12<br>கடிதத்தை வாசித்துப் புரிந்து கொள்வர்.<br><br>2.4.13<br>குறிவரைவை வாசித்துப் புரிந்து கொள்வர். | 1<br>**மிகக் குறைவு** | மிகக் குறைந்த அளவில் மட்டுமே ஒரே பொருள் தரும் சொற்களை அறியவும் விளம்பரம், உரையாடல், கடிதம், குறிவரைவு ஆகியவற்றை வாசித்துப் புரிந்துகொண்டு கேள்விகளுக்குப் பதிலளிக்கவும் இயலும். |
| | | 2<br>**குறைவு** | குறைந்த அளவில் மட்டுமே ஒரே பொருள் தரும் சொற்களை அறியவும் விளம்பரம், உரையாடல், கடிதம், குறிவரைவு ஆகியவற்றை வாசித்துப் புரிந்துகொண்டு கேள்விகளுக்குப் பதிலளிக்கவும் இயலும். |
| | | 3<br>**திருப்தி** | ஓரளவு, ஒரே பொருள் தரும் சொற்களை அறியவும் விளம்பரம், உரையாடல், கடிதம், குறிவரைவு ஆகியவற்றை வாசித்துப் புரிந்துகொண்டு கேள்விகளுக்குப் பதிலளிக்கவும் இயலும். |
| | | 4<br>**நன்று** | ஒரே பொருள் தரும் சொற்களை அறியவும் விளம்பரம், உரையாடல், கடிதம், குறிவரைவு ஆகியவற்றை வாசித்துப் புரிந்துகொண்டு கேள்விகளுக்குத் தெளிவாகப் பதிலளிக்கவும் இயலும். |
| | | 5<br>**சிறப்பு** | ஒரே பொருள் தரும் சொற்களை அறியவும் விளம்பரம், உரையாடல், கடிதம், குறிவரைவு ஆகியவற்றை வாசித்துப் புரிந்துகொண்டு கேள்விகளுக்குத் தெளிவாக நல்ல மொழிநடையில் பதிலளிக்கவும் இயலும். |
| | | 6<br>**மிகச் சிறப்பு** | ஒரே பொருள் தரும் சொற்களை அறியவும் விளம்பரம், உரையாடல், கடிதம், குறிவரைவு ஆகியவற்றை வாசித்துப் புரிந்துகொண்டு கேள்விகளுக்குத் தெளிவாக நல்ல மொழிநடையில் இலக்கணப்பிழையின்றிப் பதிலளிக்கவும் இயலும். |

**3.0 எழுத்து**
**தொகுதி 1**

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் | தர அடைவு | |
|---|---|---|---|
| | | **அடைவுநிலை** | **அடைவுநிலை விவரிப்பு** |
| 3.1<br>நல்ல கையெழுத்தில் சரியான வரிவடிவத்துடன் தூய்மையாக எழுதுவர். | 3.1.16<br>பத்தியைப் பார்த்துச் சரியான வரிவடிவத்துடன் தூய்மையாக எழுதுவர். | 1<br>**மிகக் குறைவு** | மிகக் குறைந்த அளவிலும் அதிகப் பிழையுடனும் மட்டுமே பத்தியைப் பார்த்துச் சரியான வரிவடிவத்துடன் தூய்மையாக எழுதவும் சொல்வதெழுதுதலாக எழுதவும் இயலும். |
| | | 2<br>**குறைவு** | குறைந்த அளவிலும் குறைந்த பிழையுடனும் மட்டுமே பத்தியைப் பார்த்துச் சரியான வரிவடிவத்துடன் தூய்மையாக எழுதவும் சொல்வதெழுதுதலாக எழுதவும் இயலும். |
| 3.5<br>சொல்வதை எழுதுவர். | 3.5.7<br>பத்தியைச் சொல்வதெழுதுதலாக எழுதுவர். | 3<br>**திருப்தி** | ஓரளவு, பத்தியைப் பார்த்துச் சரியான வரிவடிவத்துடன் தூய்மையாக எழுதவும் சொல்வதெழுதுதலாக எழுதவும் இயலும். |
| | | 4<br>**நன்று** | பத்தியைப் பார்த்துச் சரியான வரிவடிவத்துடனும் தூய்மையுடனும் சீராக எழுதவும் சொல்வதெழுதுதலைப் பிழையின்றி எழுதவும் இயலும். |
| | | 5<br>**சிறப்பு** | பத்தியைப் பார்த்துச் சரியான வரிவடிவத்துடனும் தூய்மையுடனும் சீராக எழுதவும் சொல்வதெழுதுதலைப் பிழையின்றிச் சீராக எழுதவும் இயலும். |
| | | 6<br>**மிகச் சிறப்பு** | பத்தியைப் பார்த்துச் சரியான வரிவடிவத்துடனும் தூய்மையுடனும் சீராக எழுதவும் சொல்வதெழுதுதலைப் பிழையின்றித் தூய்மையாகவும் சீராகவும் எழுதவும் இயலும். |

**3.0 எழுத்து**
**தொகுதி 2**

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் | தர அடைவு | |
|---|---|---|---|
| | | **அடைவுநிலை** | **அடைவுநிலை விவரிப்பு** |
| 3.4<br>கருத்துணர் கேள்விகளுக்குப் பதில் எழுதுவர். | 3.4.10<br>விளையாட்டுத் தொடர்பான பனுவலையொட்டிய கேள்விகளுக்குப் பதில் எழுதுவர்.<br>3.4.11<br>கலை தொடர்பான பனுவலையொட்டிய கேள்விகளுக்குப் பதில் எழுதுவர்.<br>3.4.12<br>அறிவியல் தொடர்பான பனுவலையொட்டிய கேள்விகளுக்குப் பதில் எழுதுவர்.<br>3.4.13<br>பண்பாடு தொடர்பான பனுவலையொட்டிய கேள்விகளுக்குப் பதில் எழுதுவர்.<br>3.4.14<br>தகவல் தொடர்புத் தொழில்நுட்பம் தொடர்பான பனுவலையொட்டிய கேள்விகளுக்குப் பதில் எழுதுவர்.<br>3.4.15<br>சுற்றுச்சூழல் தொடர்பான பனுவலையொட்டிய கேள்விகளுக்குப் பதில் எழுதுவர்.<br>3.4.16<br>வரலாறு தொடர்பான பனுவலையொட்டிய கேள்விகளுக்குப் பதில் எழுதுவர். | 1<br>**மிகக் குறைவு** | மிகக் குறைந்த அளவிலும் அதிக இலக்கணப்பிழையுடனும் மட்டுமே விளையாட்டு, கலை, அறிவியல், பண்பாடு, தகவல் தொடர்புத் தொழில்நுட்பம், சுற்றுச்சூழல், வரலாறு தொடர்பான பனுவலையொட்டிய கேள்விகளுக்குப் பதில் எழுத இயலும். |
| | | 2<br>**குறைவு** | குறைந்த அளவிலும் குறைந்த இலக்கணப்பிழையுடனும் மட்டுமே விளையாட்டு, கலை, அறிவியல், பண்பாடு, தகவல் தொடர்புத் தொழில்நுட்பம், சுற்றுச்சூழல், வரலாறு தொடர்பான பனுவலையொட்டிய கேள்விகளுக்குப் பதில் எழுத இயலும். |
| | | 3<br>**திருப்தி** | விளையாட்டு, கலை, அறிவியல், பண்பாடு, தகவல் தொடர்புத் தொழில்நுட்பம், சுற்றுச்சூழல், வரலாறு தொடர்பான பனுவலையொட்டிய கேள்விகளுக்கு ஓரளவு பதில் எழுத இயலும். |
| | | 4<br>**நன்று** | விளையாட்டு, கலை, அறிவியல், பண்பாடு, தகவல் தொடர்புத் தொழில்நுட்பம், சுற்றுச்சூழல், வரலாறு தொடர்பான பனுவலையொட்டிய கேள்விகளுக்குத் தெளிவாகப் பதில் எழுத இயலும். |
| | | 5<br>**சிறப்பு** | விளையாட்டு, கலை, அறிவியல், பண்பாடு, தகவல் தொடர்புத் தொழில்நுட்பம், சுற்றுச்சூழல், வரலாறு தொடர்பான பனுவலையொட்டிய கேள்விகளுக்கு நல்ல மொழிநடையில் தெளிவாகப் பதில் எழுத இயலும். |
| | | 6<br>**மிகச் சிறப்பு** | விளையாட்டு, கலை, அறிவியல், பண்பாடு, தகவல் தொடர்புத் தொழில்நுட்பம், சுற்றுச்சூழல், வரலாறு தொடர்பான பனுவலையொட்டிய கேள்விகளுக்கு நல்ல மொழிநடையில் இலக்கணப்பிழையின்றித் தெளிவாகப் பதில் எழுத இயலும். |

**3.0 எழுத்து**
**தொகுதி 3**

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் | தர அடைவு | |
|---|---|---|---|
| | | அடைவுநிலை | அடைவுநிலை விவரிப்பு |
| 3.6<br>கருத்துகளைக் கோவையாக எழுதுவர். | 3.6.6<br>சூழலுக்கேற்ற வாக்கியங்களைக் கோவையாக எழுதுவர்.<br><br>3.6.7<br>தலைப்பையொட்டிய கருத்துகளை 60 சொற்களில் கோவையாக எழுதுவர். | 1<br>**மிகக் குறைவு** | மிகக் குறைந்த அளவிலும் அதிக இலக்கணப்பிழையுடனும் மட்டுமே சூழலுக்கேற்ற வாக்கியங்களையும் தலைப்பையொட்டிய கருத்துகளையும் கோவையாக எழுத இயலும். |
| | | 2<br>**குறைவு** | குறைந்த அளவிலும் குறைவான இலக்கணப்பிழையுடனும் மட்டுமே சூழலுக்கேற்ற வாக்கியங்களையும் தலைப்பையொட்டிய கருத்துகளையும் கோவையாக எழுத இயலும். |
| | | 3<br>**திருப்தி** | ஓரளவு, சூழலுக்கேற்ற வாக்கியங்களையும் தலைப்பையொட்டிய கருத்துகளையும் கோவையாக எழுத இயலும் |
| | | 4<br>**நன்று** | சூழலுக்கேற்ற வாக்கியங்களையும் தலைப்பையொட்டிய கருத்துகளையும் இலக்கணப்பிழையின்றிக் கோவையாக எழுத இயலும் |
| | | 5<br>**சிறப்பு** | சூழலுக்கேற்ற வாக்கியங்களையும் தலைப்பையொட்டிய ஏரணமான கருத்துகளையும் இலக்கணப்பிழையின்றிக் கோவையாக எழுத இயலும். |
| | | 6<br>**மிகச் சிறப்பு** | சூழலுக்கேற்ற வாக்கியங்களையும் தலைப்பையொட்டிய ஏரணமான கருத்துகளையும் இலக்கணப்பிழையின்றி மொழியணியைப் பயன்படுத்திக் கோவையாக எழுத இயலும். |

**4.0 செய்யுளும் மொழியணியும்**

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் | தர அடைவு | |
|---|---|---|---|
| | | அடைவுநிலை | அடைவுநிலை விவரிப்பு |
| 4.3<br>உலகநீதியின் பொருளை அறிந்து கூறுவர்; எழுதுவர். | 4.3.3<br>ஆறாம் ஆண்டுக்கான உலகநீதியின் பொருளை அறிந்து கூறுவர்; எழுதுவர். | செய்யுள் மொழியணிக்கான கற்றல் தரங்களைப் பேச்சு, எழுத்துத் திறன்களின் வாயிலாக மதிப்பீடு செய்தல் வேண்டும். எனினும், செய்யுள் மொழியணிக்கான கற்றல்கற்பித்தல் நடவடிக்கைகள் தனிப் பாடவேளையிலேயே நடைபெற வேண்டும். | |
| 4.4<br>திருக்குறளின் பொருளை அறிந்து கூறுவர்; எழுதுவர். | 4.4.4<br>ஆறாம் ஆண்டுக்கான திருக்குறளின் பொருளை அறிந்து கூறுவர்; எழுதுவர். | | |
| 4.5<br>இணைமொழிகளின் பொருளை அறிந்து கூறுவர்; சூழலுக்கேற்பச் சரியாகப் பயன்படுத்துவர். | 4.5.5<br>ஆறாம் ஆண்டுக்கான இணைமொழிகளின் பொருளை அறிந்து கூறுவர்; சூழலுக்கேற்பச் சரியாகப் பயன்படுத்துவர். | | |
| 4.6<br>உவமைத்தொடர்களின் பொருளை அறிந்து கூறுவர்; சூழலுக்கேற்பச் சரியாகப் பயன்படுத்துவர். | 4.6.3<br>ஆறாம் ஆண்டுக்கான உவமைத்தொடர்களின் பொருளை அறிந்து கூறுவர்; சூழலுக்கேற்பச் சரியாகப் பயன்படுத்துவர். | | |
| 4.8<br>மரபுத்தொடர்களின் பொருளை அறிந்து கூறுவர்; சூழலுக்கேற்பச் சரியாகப் பயன்படுத்துவர். | 4.8.4<br>ஆறாம் ஆண்டுக்கான மரபுத்தொடர்களின் பொருளை அறிந்து கூறுவர்; சூழலுக்கேற்பச் சரியாகப் பயன்படுத்துவர். | | |
| 4.9<br>பழமொழிகளின் பொருளை அறிந்து கூறுவர்; எழுதுவர். | 4.9.4<br>ஆறாம் ஆண்டுக்கான பழமொழிகளின் பொருளை அறிந்து கூறுவர்; எழுதுவர். | | |

## 5.0 இலக்கணம்

| உள்ளடக்கத் தரம் | கற்றல் தரம் | தர அடைவு | |
|---|---|---|---|
| | | அடைவுநிலை | அடைவுநிலை விவரிப்பு |
| 5.3<br>சொல்லிலக்கணத்தை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். | 5.3.10<br>ஏழாம், எட்டாம் வேற்றுமை உருபுகளை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். | இலக்கணத்திற்கான கற்றல் தரங்களைப் பேச்சு, எழுத்துத் திறன்களின் வாயிலாக மதிப்பீடு செய்தல் வேண்டும். எனினும், இலக்கணத்திற்கான கற்றல்கற்பித்தல் நடவடிக்கைகள் தனிப் பாடவேளையிலேயே நடைபெற வேண்டும். | |
| 5.4<br>வலிமிகும் இடங்களை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். | 5.4.4<br>அப்படி, இப்படி, எப்படி என்பனவற்றுக்குப்பின் வலிமிகும் என்பதை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.<br><br>5.4.5<br>ஓரெழுத்துச் சொல்லுக்குப்பின் வலிமிகும் என்பதை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். | | |
| 5.5<br>வலிமிகா இடங்களை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். | 5.5.5<br>அவ்வளவு, இவ்வளவு, எவ்வளவு என்பனவற்றுக்குப்பின் வலிமிகா என்பதை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.<br>5.5.6<br>அத்தனை, இத்தனை, எத்தனை என்பனவற்றுக்குப்பின் வலிமிகா என்பதை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.<br>5.5.7<br>ன்று, ந்து என முடியும் வினையெச்சத்தின் பின் வலிமிகா என்பதை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர்.<br>5.5.8<br>ண்டு, ய்து என முடியும் வினையெச்சத்தின் பின் வலிமிகா என்பதை அறிந்து சரியாகப் பயன்படுத்துவர். | | |

## செய்யுளும் மொழியணியும்

**உலகநீதி - உலகநாத பண்டிதர்**

1. போகாத விடந்தனிலே போக வேண்டாம்.
2. போகவிட்டுப் புறஞ்சொல்லித் திரிய வேண்டாம்.

**திருக்குறள் - திருவள்ளுவர்**

1. புகழ்பட வாழாதார் தந்நோவார் தம்மை
   இகழ்வாரை நோவது எவன். (237)
2. மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து
   நோக்கக் குழையும் விருந்து. (90)

**இணைமொழி**

1. மேடு பள்ளம்
2. நன்மை தீமை

**உவமைத்தொடர்**

1. சூரியனைக் கண்ட பனி போல
2. இலைமறை காய் போல

**மரபுத்தொடர்**

1. ஆறப் போடுதல்
2. செவி சாய்த்தல்

**பழமொழிகள்**

1. ஆழம் அறியாமல் காலை விடாதே.
2. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.

## இலக்கணம்

**சொல்லிலக்கணம்**

- வேற்றுமை - ஏழாம் வேற்றுமை - எட்டாம் வேற்றுமை

**வலிமிகும் இடங்கள்**

- அப்படி, இப்படி, எப்படி என்பனவற்றுக்குப்பின்
- ஓரெழுத்துச் சொல்லுக்குப்பின்

**வலிமிகா இடங்கள்**

- அவ்வளவு, இவ்வளவு, எவ்வளவு என்பனவற்றுக்குப்பின்
- அத்தனை, இத்தனை, எத்தனை என்பனவற்றுக்குப்பின்
- ன்று, ந்து என முடியும் வினையெச்சத்தின்பின்
- ண்டு, ய்து என முடியும் வினையெச்சத்தின்பின்

# சொற்பட்டியல்

**அ**

அறம்
அல்லி
அலகு
அனல்
அடகு
அலறல்
அம்மை
அரும்பு
அமுதம்
அசைவு
அனுமதி
அபூர்வம்
அவ்வாறு
அறிக்கை
அடிவாரம்
அலட்சியம்
அன்பளிப்பு
அளவுகோல்

**ஆ**

ஆர்வம்
ஆக்கம்
ஆணை
ஆடவர்
ஆத்திரம்
ஆபரணம்
ஆடம்பரம்

**இ**

இடர்
இயல்பு
இசைவு
இல்லறம்
இருதயம்
இடையூறு
இயந்திரம்
இடைவேளை

**ஈ**

ஈறு
ஈரல்

**உ**

உறை
உப்புமா
உயிரினம்
உச்சரிப்பு
உடைமை
உள்ளங்கை
உடன்பிறப்பு

**ஊ**

ஊர்தி
ஊழியர்
ஊர்வன
ஊடுருவல்
ஊட்டச்சத்து

**எ**

எழில்
எருது
எதிர்ப்பு
எரிவாயு
எத்தனை
எலுமிச்சை
எரிபொருள்

**ஏ**

ஏக்கம்
ஏற்றுமதி
ஏவுகணை

**ஒ**

ஒட்டடை
ஒலிபரப்பு
ஒப்புவித்தல்
ஒத்திவைப்பு
ஒட்டியாணம்

**ஓ**

ஓமம்
ஓதுதல்
ஓணான்

**க**

களம்
கசிவு
கவிஞர்
கருத்து
கம்பீரம்
கல்லூரி
கலவரம்
கணவன்
கற்பனை
கணக்கர்
கற்கண்டு
கட்டாயம்
கதிர்வீச்சு
கருப்பொருள்
கலைநிகழ்ச்சி
கறிவேப்பிலை
கத்தரிக்கோல்
கட்டொழுங்கு
கருவள மையம்

**கா**

காப்புறுதி
கால்நடை
காசோலை

**கி**

கிணறு
கிளிஞ்சல்

**கீ**

கீழ்த்தளம்

**கு**

குமிழி
குறும்பு
குழம்பு
குறட்டை

**கூ**

கூச்சம்
கூட்டரசு
கூட்டுப்பணி

**கெ**

கெண்டி
கெட்டிக்காரன்

**கே**

கேவலம்

**கை**

கையுறை
கைம்மாறு
கைரேகை
கையிருப்பு

**கொ**

கொளுந்து
கொதித்தல்
கொந்தளிப்பு
கொத்தமல்லி

**கோ**

கோடி
கோணம்
கோளாறு
கோட்டான்
கோலாகலம்

**கௌ**

கௌளி
கௌரவம்

**ச**

சரடு
சற்று
சரளம்
சவால்
சலுகை
சந்திப்பு
சர்ச்சை
சதவீதம்
சந்தேகம்
சதுரங்கம்
சன்மானம்

**சா**

சாயல்
சாகசம்
சாப்பாடு
சான்றோர்
சாம்பிராணி
சாமர்த்தியம்

**சி**

சிகை
சிரமம்
சிக்கல்
சிக்குதல்
சிகிச்சை

**சீ**

சீடன்
சீதனம்
சீதோஷ்ணம்

**சு**

சுனை
சுமார்
சுரப்பி
சுற்றளவு
சுத்தியல்
சுலோகம்

**சூ**

சூலம்
சூடுதல்

**செ**

செவ்வகம்
செலவாளி
செலவீனம்
செல்வந்தர்
செவ்வாழை

**சே**

சேனை
சேட்டை

**சொ**

சொதி
சொட்டை
சொற்போர்

**சோ**

சோர்வு
சோதிடம்

**ஞா**

ஞானி
ஞாபகம்

**த**

தகடு
தகுதி
தடங்கல்
தடுமாற்றம்
தலைமுறை

**தா**

தாளம்
தாழ்வாரம்
தாழ்ப்பாள்
தானியங்கி

**தி**
திரி
திடம்
திகைப்பு
திருவிழா
திராட்சை
திருகாணி
திமிங்கிலம்

**தீ**
தீவிரம்
தீக்குச்சி
தீர்மானம்

**து**
துளசி
துடுப்பு
துவாரம்
துறைமுகம்

**தூ**
தூபம்

**தெ**
தெரிவு

**தே**
தேள்
தேகம்
தேம்பல்
தேவாரம்
தேய்பிறை

**தை**
தையல்
தைலம்
தைரியம்

**தொ**
தொல்லை
தொலைவு
தொழிலாளி
தொழிற்சாலை

**தோ**
தோல்
தோள்

**ந**
நகல்
நட்பு
நன்கொடை

**நா**
நார்
நாவல்
நாணல்
நாளிதழ்
நாட்காட்டி

**நி**
நிருபர்
நிகழ்வு
நிபுணர்
நிலக்கரி

**நீ**
நீரிழிவு
நீட்டிப்பு
நீரோட்டம்

**நெ**
நெறி
நெருக்கம்
நெடுங்கணக்கு

**நே**
நேயர்
நேரடி

**நொ**
நொடி

**ப**
பதவி
பதிவு
பதற்றம்
பதக்கம்
பரம்பரை
பட்டியல்
பண்ணை
பட்டதாரி
பல்கலைக்கழகம்

**பா**
பாகு
பானை
பார்வை
பாதிப்பு
பாதகம்
பாத்திரம்
பாய்ச்சல்
பாவைக்கூத்து

**பி**
பிடி
பிணி
பிஞ்சு
பிளவு
பிரமாதம்
பிசைதல்
பிடிவாதம்

**பு**
புகழ்
புகார்
புதினா
புதல்வி

புன்னகை
புகைப்படம்
புல்லாங்குழல்

**பூ**
பூசுதல்
பூச்செண்டு

**பெ**
பெட்டை

**பே**
பேரிடர்
பேராசிரியர்

**பொ**
பொலிவு
பொரியல்
பொன்னாடை
பொற்கொல்லர்

**போ**
போதும்
போர்வீரர்
போர்க்கப்பல்

**பௌ**
பௌர்ணமி

**ம**
மந்தை
மண்புழு
மருமகள்
மரவட்டை

**மா**
மாமிசம்
மாத்திரை
மாண்புமிகு

**மி**
மிளகு
மின்மினிப்பூச்சி

**மு**
முசுடு
முல்லை
முருங்கை

**மூ**
மூக்குத்தி
மூத்தோர்

**மெ**
மெட்டி
மெதுவாக
மெல்லினம்
மெல்லிசை

**மே**
மேனி
மேல்மாடி
மேற்கல்வி

**மை**
மைதானம்
மைத்துனர்

**மொ**
மொச்சை
மொக்கை

**யோ**
யோகம்
யோசனை
யோகாசனம்

**வ**
வடு
வசதி
வறட்சி
வறுமை
வரவேற்பு
வருமானம்
வழக்கறிஞர்
வண்ணத்துப்பூச்சி

**வா**
வாழை
வாத்து
வாந்தி
வாசனை
வானிலை
வாழ்க்கை
வாடிக்கை

**வி**
விசை
விக்கல்
விருந்து
விவாதம்
வியர்வை
விவசாயி
வித்தியாசம்

**வீ**
வீம்பு
வீராப்பு
வீராங்கனை

**வெ**
வெப்பம்
வெந்தயம்
வெற்றிலை
வெள்ளரிக்காய்

**வே**

வேட்டி

வேளை

வேறுபாடு

வேண்டுதல்

**வை**

வைராக்கியம்

**வௌ**

வௌவால்